## நிர்மலா தேவி

மெட்ரோ ரெயில் டிரைவர் நிர்மலா தேவி (25):–

மெட்ரோ ரெயிலை இயக்கி வருவதின் மூலம் பயணிகளின் பாதுகாப்புக்கு நாங்களே பொறுப்பு. அதேபோல ஒவ்வொரு குடும்பத்தின் வளர்ச்சிக்கும் பெண்களே முக்கிய பொறுப்பு. எல்லா விதமான இடையூறுகளையும், இன்னல்களையும் தாங்கி குடும்ப பாரத்தையும், தொழில் பாரத்தையும் ஒருசேர தாங்கும் சக்தி பெண்களுக்கே உண்டு. மெட்ரோ ரெயில் இயக்குவதின் மூலம் எனது பகுதியில் நான் பிரபலமாகி விட்டேன். அதேபோல ஒவ்வொரு துறைகளிலும் சாதிக்கும் பெண்கள் அடையாளம் காட்டப்பட வேண்டும். அந்த வகையில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வரும் பெண்களை அந்தந்த மாவட்டம் வாரியாக கவுரவப்படுத்த வேண்டும். இந்த வேலையை நான் மகிழ்ச்சியாக அனுபவித்து செய்கிறேன். எந்த வித கடின பணியாக இருந்தாலும் சரி குடும்பத்துக்காக அதை தோளில் தாங்கிப்பிடித்து தன் துன்பம் தெரியாமல் பணிசெய்வது பெண்களே. அதில் எனக்கு கர்வமே...



